# திருவேற்காடு நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக் கூட்டம்

**2019ஆம் ஆண்டு ஜீன் மாதம் 28ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**
**நாள்: 28.06.2019**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

**பொருள் எண். 1**

இந்நகராட்சியின் ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீன் 2019 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.801** **நாள்.28.06.2019**

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

---

**பொருள் எண். 2**

இந்நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான ஜீன் 2019 மாதத்தின் செலவுச்சீட்டுகள் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.802** **நாள்.28.06.2019**

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

---

**பொருள் எண். 3**

இந்நகராட்சியில் ஜீன் 2019ல் பதிவு செய்துள்ள பிறப்பு, இறப்பு, மற்றும் இறந்து பிறந்தகுழந்தைகளின் விவரம் மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம்

**நகர்மன்ற தீர்மான எண்.803** **நாள்.28.06.2019**

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

---

**பொருள் எண். 4**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருமின் விளக்கு வசதிக்காக ஆங்காங்கே இரும்பினாலான மின்பெட்டிகள் அமைத்து அதன் மூலம் மின்இணைப்பு பெற்று பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி, இரும்பினாலான மின்பெட்டிகள் அமைத்து சுமார் 10 வருடங்களுக்கு மேலான நிலையில் பெரும்பாலான இடங்களில் மின்பெட்டிகள் பழுதடைந்தும், போதிய மூடிகள் (Covers) உடைந்தும் உள்ளது. இதனால், இம்மின்பெட்டிகளை பராமரிப்பதில் சிரமமாக உள்ளது. எதிர்வரும் மழைக்காலங்களில் மின் விபத்துக்கள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு பழுதடைந்த மின்பெட்டிகளை மாற்றி புதியதாக மின்பெட்டிகள் அமைத்து மின் இணைப்புகளை சரிசெய்யவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) தெருமின் விளக்குகளின் அத்தியாவசிய பணியினை கருதியும் மின் விபத்துகளை தவிர்க்கும் பொருட்டும் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.804** **நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 5</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள தெருமின் விளக்குகள் தற்போது பயன்பாட்டில் உள்ள தானியங்கி சுவிட்சுகள் (Single and 3 Phase Automatic Timer) மூலமும், நேரிடையாக ஒப்பந்த பணியாளர்கள் மூலம் Fuse Carrier மூலமாக தினசரி On/Off செய்யப்படுகிறது. அவ்வாறு தானியங்கி சுவிட்சுகள் இல்லாத பெரும்பாலான இடங்களில் பணியாளர்கள் மூலம் பராமரிப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. மேலும், மழைக்காலங்களில் இப்பணியினை மேற்கொள்வதில் சிரமமாகவும் சிறு சிறு மின்விபத்துகள் ஏற்படவும் வாய்ப்புள்ளது. எனவே, குறித்த நேரத்தில் தினசரி பொது மக்களுக்கு இடையூறு இல்லாமல், மின்சிக்கனத்தினை கருத்தில் கொண்டு தெருமின் விளக்குகளை On/Off செய்து இயக்கிட தேவையான தானியங்கி சுவிட்சுகள் (Single and 3 Phase Automatic Timer) சப்ளை செய்து பொருத்தவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) தெருமின் விளக்குகளின் அத்தியாவசிய பணியினை கருதியும் குறித்த நேரத்தில் On/Off பணியினை மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.805 நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண். 6</u>**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அயனம்பாக்கம் வேலம்மாள் பள்ளி சாலை மற்றும் சுந்தரசோழபுரம் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த மின்கம்பங்களுடன் கூடிய தெரு விளக்குகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் அப்பகுதிகளில் தெருமின் விளக்குகள் வசதி இல்லாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், இரவு நேரங்களில் சமுக விரோத செயல்களும், விபத்துகளும் ஏற்படும் நிலை உள்ளது. மேலும், வி.ஜி.என் மகாலட்சுமி நகர், அயனம்பாக்கம் சேவைச்சாலை மற்றும் சுந்தரசோழபுரம் ஆகிய பகுதிகளில் தெருமின் விளக்குகளுக்காக அமைக்கப்பட்டுள்ள மின்கேபிள்கள் பழுதடைந்துள்ளதால் சீராக தெருமின் விளக்குகளை பராமரிக்க இயலாத நிலையுள்ளது. எனவே, தெருமின் விளக்குகளின் அவசியம் கருதி வேலம்மாள் பள்ளி சாலை மற்றும் சுந்தரசோழபுரம் பகுதியில் புதியதாக மின்கம்பங்கள் அமைத்து தெருமின் விளக்கு வசதி மேற்கொள்ளவும் பழுதடைந்த மின்கேபிள்களை புதியதாக சீரமைக்கவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) தெருமின் விளக்குகளின் அத்தியாவசிய பணியினை கருதி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.806 நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.7</u>**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16 காடுவெட்டி ஏரிக்கரை தெருவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றில் பொறுத்தப்பட்டுள்ள 5HP திறன் கொண்ட மின்மோட்டார்களுக்கு மின் இணைப்பு பெற மின்சார வாரியத்திற்கு விண்ணப்பித்ததை தொடர்ந்து, உதவி செயற்பொறியாளர், இயக்குதல் மற்றும் பராமரித்தல் தமிழ்நாடு மின்சார வாரியம், பாரிவாக்கம் அவர்களால் பெறப்பட்டுள்ள மதிப்பீடு தொகை ரூ.31,140/—ஐ செலுத்த மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்கண்ட தொகை ரூ.31,140/—ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த மன்றம் அனுமதி அளிக்கலாம்.

2) மேற்கண்ட பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொதுநிதியிலிருந்து தொகை செலுத்திடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.807 நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.8

இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவின் கீழ் இயங்கி வரும் டிப்பர் லாரி வாகன பதிவு எண். TN 12 V 7786 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்ய தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற **M/s.Hex Mobiles (P) Ltd.,** நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினம் ரூ.14,835/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :—**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கான தொகையினை பொதுநிதியின் கீழ் செலுத்திடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்கண்ட வாகன பணியின் அவசியத்தினை கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தொடர்ந்தமைக்கும், செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.808 நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.9

இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் டேங்கர் வாகன பதிவு எண்.TN 20 AJ 7477க்கு வட்டார போக்குவரத்து துறை மூலம் தகுதிகான் சான்றிதழ் பெற வேண்டி வாகனத்தில் உள்ள பழுதுகளை சீர் செய்யும் பொருட்டு தயாரிப்பு நிறுவனத்தால் அங்கீகராம் பெற்ற M/s.T.V.SUNDRAM IYENGAR & SONS PRIVATE LTD நிறுவனத்திடம் நேரிடையாக வாகனத்தை ஒப்படைத்து பணி மேற்கொள்ளவும் அதற்காக மேற்படி நிறுவனம் மூலம் மதிப்பீடு தொகை ரூ.1,95,405/— என பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட நிறுவனம் மதிப்பீட்டில் தெரிவித்துள்ளவாறு மதிப்பீட்டு தொகையில் 50% முன்தொகையாக வழங்க கோரியதற்கும், தொகை செலுத்துவதற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.809 நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.10

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீசன் நகர், நூம்பல் மகாலட்சுமி நகர், ஐ.சி.எல் காலனி, கோ—ஆப்ரேடிவ் நகர் மற்றும் பல்லவன் நகர் பூங்காக்களில் உள்ள நடைபாதை மின் விளக்குகள் பழுதடைந்துள்ளதால் அப்பகுதியில் உள்ள பொது மக்கள் மேற்படி பூங்காக்களை பயன்படுத்திக்கொள்வதில் இடையூறு ஏற்படுகிறது. எனவே, மேற்படி பழுதடைந்த நடைபாதை மின் விளக்குகளை சீர்செய்யவும் அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) தற்போது நாடாளுமன்ற பொது தேர்தலுக்கான தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் உள்ளதாலும், பூங்கா பயன்பாட்டின் அவசியம் கருதியும், மேற்படி பணியினை தமிழ்நாடு

மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்படி மதிப்பீட்டிற்கு மதிப்பீட்டை விட 0.10% குறைவாக அளித்த M/s.அவிக்னா எண்டர்பிரைசஸ் நிறுவனத்தாருக்கு பணி உத்திரவு வழங்கி பணி தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் திறந்தவெளி ஒதுக்கீடு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.810 நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.11

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழை 2018 பொய்த்துபோனதாலும், தற்போது நிலவி வரும் கோடை காலத்தால் ஆழ்துளை குழாய் கிணறுகளில் நீர்மட்டம் வெகு வேகமாக குறைந்து வருவதால் அனேக இடங்களில் பொது மக்களுக்கு சீராக குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலை உள்ளது. அதன்படி, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்அயனம்பாக்கம் அம்பேத்கார் தெரு, மகாத்மா காந்தி தெரு, வடநூம்பல் பிள்ளையார் கோயில் தெரு மற்றும் புளியம்பேடு ஆகிய பகுதிகளில் பழுதடைந்துள்ள பொது கிணறுகளை சுத்தம் செய்து, ஆழப்படுத்தி மின்மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் மேற்கொள்ளவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) தற்போது நாடாளுமன்ற பொது தேர்தலுக்கான தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் உள்ளதாலும், பொது மக்கள் பயன்பாட்டின் அவசியம் கருதியும், மேற்படி பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் மேற்படி மதிப்பீட்டிற்கு மதிப்பீட்டை விட 0.15% குறைவாக அளித்த ஒப்பந்ததாரர் திரு.G.விஜயகுமார் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணி தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்படி பணிக்குண்டான செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.811 நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.12

திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் வீடுதோறும் விடுதலின்றி குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. அவ்வாறு சேகரம் செய்யப்படும் மக்கும் மற்றும் மக்காத தன்மை கொண்டவை என தரம் பிரிக்கப்படுகிறது. மேலும் சேகரிக்கப்படும் குப்பைகள் மக்கும் தன்மை கொண்டவைகளை நேரடியாக முதல் நிலை சேகரிப்பு இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 7 பசுமை உரக்குடில்களில் உரம் தயாரிக்கவும். அவ்வாறு சேகரிக்கப்படும் குப்பைகளில் துர்நாற்றம் வீசாமல் இருக்கவும், தொற்று நோய்கள் பரவாமல் இருக்கவும் மேலும் அக்குப்பைகளின் மீது ஈக்கள் பரவாமல் கட்டுப்படுத்தவும் “ ரெடிமிக்ஸ் ” எனும் கிருமி நாசினியை அக்குப்பைகளில் தெளிக்க தேவையான அளவில் வாங்கி உபயோகப்படுத்தவும் இதற்கான தோராய செலவினம் ரூ.9.50 இலட்சத்திற்கும் மேற்படி ரெடிமிக்ஸ் நாசினியை ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்கிக்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது நிதியின் கீழ் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.812 நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.13

திருவேற்காடு நகராட்சி **09.08.2010** முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு **28.50** சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். **2011**ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி **62289**, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி **89167** குடியிருப்புகளின் எண்ணிக்கை **22291** ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு **28.82** மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. மேலும் இந்நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.726, நாள்.28.02.2019–ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து **M/s.ஈக்காடு வேளாண்மைப் பொறியியல் பணி கூட்டுறவு மையம் லிட்.,** மூலம் 5 எண்ணிக்கை சப்ளை செய்ய அனுமதிக்கப்பட்டது. மேற்படி நிறுவனத்தின் நீட்டிப்பு காலம் **31.08.2019** உடன் முடிவடைவதால் தொடர்ந்து பொது சுகாதாரப் பணிகள் தடையேதும் ஏற்படாமல் பணி மேற்கொள்ளவும் **01.09.2019** முதல் மேலும் ஆறு மாத காலத்திற்கு ஒப்பந்தபுள்ளி கோரவும் இதற்காகும் தோரய செலவினம் ரூ.**20.00** இலட்சம் பொது நிதியில் மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை தினசரி நாளிதழில் வெளியிடவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ)பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.813** **நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.14

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் கொசுக்களினால் பரவக்கூடிய டெங்கு காய்ச்சல், காலரா, டைபாய்டு, பன்றிக்காய்ச்சல் மற்றும் சிக்குன்குனியா போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க இந்நகராட்சி முழுவதும் உள்ள பகுதிகளில் நோய் தடுப்பு நடவடிக்கை பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் (IEC) பொது மக்களுக்கு வழங்கிட டெங்கு கொசு ஒழிப்பு வாசகங்கள் பதித்த ஸ்டிக்கர்கள், அறிவிப்பு நோட்டீஸ்கள், வால் போஸ்டர்கள் மற்றும் மல்டி கலர் பேனர்கள் அச்சடித்து சப்ளை செய்யவும் மற்றும் முக்கிய இடங்களில் டெங்கு கொசு ஒழிப்பு பேனர்கள் வைக்க தேவையான இரும்பு கம்பிகள் நட்டு வைக்கவும் விளம்பரம் செய்யவும் இதற்கான தோராய செலவினம் ரூ.**9.50** இலட்சத்திற்கும், மேலும் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு அச்சக நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி / விலைப்புள்ளிகள் பெற்று பணிகள் மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:-

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ)பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பொது நிதியில் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.814** **நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.15

திருவேற்காடு நகராட்சியில் **2019–20–**ம் ஆண்டிற்கான பொது சுகாதார பணிகள் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகிறது. மேலும் இந்நகராட்சியில் உள்ள 18 வார்டுகளிலும் வீடுகள் தோறும் விடுதலின்றி குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து சேகரம் செய்யப்படுகிறது. மேற்படி சேகரம் செய்யப்படும் குப்பைகள் முதல் நிலையிலேயே நகராட்சி உரக்கிடங்கிற்கு எடுத்து செல்லப்பட்டு உரம் தயாரிக்கப்படுகிறது. மேலும் உரம் தயாரிக்க தேவையான உதிரிப் பொருட்கள் உமி, தவிடு, வெல்லம், தயிர் ஆகியவை உபயோகப்படுத்த வேண்டி உள்ளதால், மேற்படி உரம் தயாரிக்க தேவைப்படும் உதிரிப் பொருட்கள் வாங்கி ஆறு மாத காலத்திற்கு உள்ளூர்

நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று வாங்கி உபயோகப்படுத்திக் கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பொது நிதியில் செலவீனம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.815 நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.16

இந்நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட 18 வார்டுகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள கழிவறைகளை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளே பராமரிக்க பள்ளிக் கல்வி ப.க.4(1)—ன் துறையின் அரசு ஆணை(நிலை) எண்.77, நாள்:—13.04.2015—ன் படியும் மற்றும் அரசு ஆணை(நிலை) எண்.166, நாள்.23.11.2016—ன் நகராட்சிகள் நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் படியும் நகராட்சி பகுதிகளில் உள்ள மொத்த 13 அரசுப் பள்ளிகளில் உள்ள கழிவறைகளை பராமரிக்க அரசு ஆணைகளில் வெளியிட்டுள்ள விதி முறைகளின்படி பணிகள் மேற்கொள்ள ஒப்படைக்கும் காலம் 1 வருட காலத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு செலவினம் தொகை ரூ.9.90 இலட்சம் பொது நிதியில் மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும் அதற்கான செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.816 நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.17

திருவேற்காடு நகராட்சி கோவில் நகரமாகவும் 28.50 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட நகரம் என்பதாலும் பொது சுகாதார திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பணிகள் நடைப்பெற்றுவரப்படுகிறது. மேலும் இந்நகராட்சியில் புகழ்பெற்ற ஸ்ரீ தேவி கருமாரியம்மன் திருக்கோயில் உள்ளதால் மாதந்தோறும் திருவிழா இப்பகுதியில் உள்ள அனைத்து கோயில்களிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வரப்படுகிறது. ஆகவே இந்நகராட்சி சார்பாக நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு சுகாதார பணிகளுக்கு தேவையான தளவாடப் பொருட்கள் போதிய அளவு இருப்பு இல்லாததால், பொது சுகாதார பொருட்களின் தேவையினை கருத்தில் கொண்டு அரசு அங்கீகரிக்கப்பட்ட (SIDCO) சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் தற்போது தளவாட பொருட்கள் கொள்முதல் செய்யவும் இதற்கான தோராய செலவினம் ரூ.7.00 இலட்சம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.817 நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.18

2019 – 20ம் ஆண்டிற்கு திருவேற்காடு நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளிலும் வீடுதோறும் விடுதலின்றி குப்பைகள் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரித்து சேகரம் செய்யப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் மக்காத மற்றும் மறுசுழற்ச்சி செய்ய இயலாத கழிவுகள் தேக்கமடைந்து பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில், நோய்

தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு பாதுகாப்பாக கையாள போரா பிளாஸ்டிக் கோணிப்பைகளில் அடைத்து பாதுகாப்பாக எடுத்துச்செல்ல கோணிப்பைகள் நாள் ஒன்றுக்கு 250 முதல் 350 தேவைப்படுவதாக இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரின் குறிப்பில் தெரிவித்துள்ளார் ஆகவே பொது சுகாதார பணியின் அவசியத்தினை கருதி பிளாஸ்டிக் போரா கோணிப்பைகள் இரண்டு மாதகாலத்திற்கு ஏற்கனவே நகர் மன்றம் அனுமதி அளித்த ஒப்பந்த நிறுவனத்திடமே அதே விலை விகிதப்படி வாங்கி உபயோக்கிதிட இதற்கான செலவினம் ரூ.9.90 இலட்சம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.818 நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.19

திருவேற்காடு நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள், பொது சுகாதார நடவடிக்கைகள் பல்வேறு எடுக்கப்பட்டு வரப்படுகிறது. இதில் முதிர் கொசுக்கள் அழிக்க புகைமருந்து தெளிப்பான் மூலம் புகைமருந்து தெளிக்கப்பட்டு வந்தது.

தற்போது மேற்படி மூன்று பெரிய புகை மருந்து தெளிப்பான் மற்றும் நான்கு சிறியவகை புகை மருந்து தெளிப்பான்களில் தற்போது ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக சீர்செய்யவும் மேலும் எதிர்வரும் காலம் மழைக்காலம் தொடங்க உள்ளதாலும், நகராட்சி பகுதிகள் முழுவதும் புகைமருந்து தெளிக்க வேண்டியுள்ளது. அவசியமானது என்பதால் பழுதடைந்துள்ள புகைபோக்கி தெளிப்பான்கள் பழுது நீக்கம் செய்யவும் இதற்கான தோராய செலவீனம் ரூ.4.50 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.819 நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.20

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89167 குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 28.82 மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. மேலும் இந்நகராட்சி பகுதியில் சேகரிக்கப்படும் குப்பைகள் முதல்நிலையிலேயே நேரடியாக பசுமை உரக்குடிலுக்கு எடுத்து செல்லப்பட்டு மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரிக்கப்படுகிறது. மேலும் மக்காத குப்பைகள் மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகள் உடனடியாக அப்புறப்படுத்த போரா பிளாஸ்டிக் கோணிப்பைகளில் அடைத்து அரியலூர் தொழிற்சாலை, அரக்கோணம் தொழிற்சாலை, ரெடிஹில்ஸ் தொழிற்சாலை மற்றும் நாவலூர் ஆகிய இடங்களிலுள்ள தனியார் நிறுவனங்களில் திரவ எரிபொருளாக பயன்படுத்தப்படுவதால் மேற்படி நிறுவனங்களுக்கு நகராட்சி பகுதியகளில் சேகரிக்கப்படும் மக்காத மற்றும் மறுசுழற்சி செய்ய இயலாத கழிவுகளை நகராட்சியின் சொந்த செலவில் தனியார் வாடகை வாகனம் மூலம் எடுத்து செல்லவும் இதற்கான செலவீனம் ரூ.23.00 இலட்சம் பொது நிதியில் மேற்கொள்ளவும் அதற்கான ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.820 நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.21

திருவேற்காடு நகராட்சி 09.08.2010 முதல் தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி பரப்பளவு 28.50 சதுர கிலோ மீட்டர் கொண்டதாகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 62289, தற்போது பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 89167 குடியிருப்புகளின் எண்ணிக்கை 22291 ஆகும். இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் குப்பையின் அளவு 28.82 மெட்ரிக்டன் குப்பைகள் சேகரம் செய்யப்படுகிறது. மேலும் இந்நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து பகுதிகளிலும் டிரைசைக்கிள் (மூன்று சக்கர வண்டி) மூலம் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. அவ்வாறு பயன்படுத்தப்படும் டிரைசைக்கிள் பழுது நீக்கம் மற்றும் ஆண்டு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் இதற்கான செலவீனம் ரூ.4.50 இலட்சம் பொது நிதியில் மேற்கொள்ளவும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினை தினசரி நாளிதழில் வெளியிடவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பொது நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.821 நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.22

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக JCB இயந்திர வாகனம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி வாகனத்தினை சீராக இயக்கிட ஏதுவாக ஆயில் சர்வீஸ் செய்திடவும், அதற்கு தேவையான ஆயில் கொள்முதல் செய்ய பெறப்பட்டுள்ள M/s.S.P Auto Mobiles, எண்.223, ஆவடி–பூவிருந்தவல்லி சாலை, (எஸ்.எ.இன்ஜினியரிங் கல்லூரி எதிரில்), வீரராகவபுரம், சென்னை–77 நிறுவனத்தின் மூலம் பெறப்பட்ட விலைப்புள்ளி தொகை ரூ.54,906/– மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி JCB இயந்திர வாகனத்தின் பயன்பாட்டின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி ஆணையர் (ம) தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்ற நடவடிக்கை தொடர்ந்தமைக்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்கண்ட பணியினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.822 நாள்.28.06.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**ஒம்/-தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

/உண்மை நகல்/

**ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**